யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

முதலாம் தவணைப் பரீட்சை – 2010

செயன்முறைத் தொழிநுட்பத்திறன்கள்

தரம் : 7

நேரம்: 1.30 மணி

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) பயிர் நட பொருத்தமான மண்ணாக அமைவது
1. இருவாட்டி மண் 2. களிமண் 3. உவர்மண் 4. மணல்மண்

2) சாடித்தாவர மென்றின் இலைகள் மஞ்சள் நிறமாகி காணப்பட்டது. இதற்கு இடக்கூடிய பசளை
1. யூரியா 2. பெட்டாசியம்மியூரியேற் 3. பொட்டாசியம் 4. பொட்டாசியம் சல்பேற்று

3) பின்வரும் பொருட்களில் எதை கூட்டெரு தயாரிக்கும் கூடையினுள் இடுதலாகாது
1. தாவரக்கழிவு 2. கடதாசி 3. பொலித்தீன் 4. விலங்குகழிவு

4) குவி முறையில் கூட்டெருவை தயாரித்த பின் அதனை எத்தனை மாதத்தின் பின் பயன்படுத்தலாம்
1. 1½ மாதம் 2. 2 மாதம் 3. 2 ½ மாதம் 4. 3 மாதம்

5) வீட்டுத்தோட்டத்தை பாதுகாக்க உகந்த வேலியாக விளங்குவது
1. முட்கம்பிவேலி 2. தடிகளால் அமைத்தவேலி 3. தாவரவேலி 4. யாவும் சரி

6) நாற்றுக்களை நடுவதற்க உகந்த நேரமாக இருப்பது
1. காலை 2. மதியம் 3. மாலை 4. அதிகாலை

7) பழுஅழுகல் உண்டாதல், வெண்புள்ளி, இலைவெளிறல் என்பன எவ்நோய்கான அறிகுறியாகும்.
1. பூஞ்சணநோய் 2. பற்றியாநோய் 3. வைரசுநோய் 4. வாடல்நோய்

8) பயிர்களுக்கு கொழுகொம்பிடுவதன் அவசியம்
1. கொடிவகை சார்ந்த பயிர்கள் பற்றி பிடித்து ஏறுவதற்கு
2. பயிர்களுக்கு நிழலை வழங்குவதற்க்கு
3. பயிருக்கு போதிய நெருக்கத்தை வழங்க
4. பயிர்கள் நீண்ட தூரம் வளர்வதற்க்கு

9) நல்ல மீன் ஒன்றிற்கான அவதானம் அல்லாதது எது
1. செதில்கள் இலகுவில் கழராது
2. மீன்உடைய பூக்கள் சிவப்பாக இருத்தல்
3. தசைமென்மையாக இருத்தல்
4. நல்ல மீனுக்குரிய வாசனையை கொண்டு இருத்தல்

10) நல்ல சுகாதார பழக்க வழக்கங்களில் ஒன்று
1. ஏப்ரன் அணியாமல் உணவு தயாரித்தல்
2. பாத்திரங்களை கழுவாது பயன்படுத்தல்
3. உணவு உண்ண முன்கைகளை கழுவுதல்
4. மரக்கறிகளை கழுவாது பயன்படுத்தல்

11) விற்சுருள் மூலம் இயக்கத்தை ஆரம்பிக்கும் பொருள்
1. நெம்புகோல் 2. தள்ளுவண்டி 3. கடிகாரம் 4. துறப்பணம்

12) மணல் மண் மாதிரியை இருவாட்டி மண்ணாக சேர்க்கவேண்டியது
1. களிமண் 2. மணல்மண் 3. நீர் 4. உமிகரி

13) முதலாவது வகை நெம்பு கோலுக்கு உதாரணம்
1. கத்தரிகோல் 2. பாக்குவெட்டி 3. சாவணம் 4. ஒற்றைசில்லுத்தள்ளுவண்டி



kalvi.lk

14) நீர்தட்டுப்பாடான இடங்களில் பயிர்களுக்கு எம்முறைமூலம் நீர்ப்பாசனம் செய்யலாம்

1. தூவல் நீர்ப்பாசனம் 2. பாத்திமுறை மூலம்

3. வாளியினால் நீர்ஊற்றல் 4. படிக்கட்டுமுறைமூலம்

15) மரவேலைகளில் பெருமளவு பயன்படக்கூடிய ஆணி

1. கம்பியாணி 2. மென்ஆணி 3. திருகாணி 4. பரியாணி

**சரியாயின் ✓ எனவும் பிழையாயின் x எனவும் தருக**

16) சங்குன் ஒருவகை கீரைவகையை சார்ந்தது ( )

17) மனிதன் இறுதி நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படும் பொருட்கள் அனைத்தும் நுகர்வுப்பொருட்களாகும். ( )

18) பலகை ஒன்றின் விளிம்பை வரைவதற்கு அடையாளமானி பயன்படுகின்றது ( )

19) விற்சுருள் ஒன்றின் மூலம் முறையான இயக்க ஆரம்பமொன்றையும் தொடர்ச்சியான இயக்கத்தையும் பெறமுடியும் ( )

20) பீற்றூட் கிழங்கை சமையலின் போது ஏனைய மரக்கறிகளுடன் கலந்தால் கறிவகைகளின் நிறம் மாற்றமடையும் ( )

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடைதருக.**

**வினாகளுக்கு விடையளிக்கும் சந்தர்ப்பத்தில் "பாட விளக்கத்துடன்" கூடிய விடைகளுக்கு அதிக கவனம் செலுத்தப்படும்.**

(01) 1) குளிர்முறையில் கூட்டெரு தயாரிக்கும் முறையினை குறிப்பிடுக.

2) வேலித்தாவரங்களாக பயன்படுத்தக்கூடியவை எவை?

3) மண்ணரிப்பு காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் 3 தருக

4) போசணைக் கூறுகளினை தருக.

5) உணவு தயார்படுத்தலுக்காக தன்னை தயார்படுத்திக்கொள்ள கொள்ள வேண்டிய விடயங்கள 2 தருக. (10புள்ளிகள்)

02) 1) நாம் நாட்டிய பயிரில் இருந்து உச்சபயனை பெற பின் கண்காணிப்பு மிகவும் அவசியமாகும் அவ்வாறான பின் கண்காணிப்புக்கள் மூன்று தருக.

2) வீட்டுத்தோட்டத்தினால் எமக்கு கிடைக்கும் பயன்கள் எவை?

3) எமக்கு ஏன் உணவு அவசியமாகின்றது

4) உணவிற்காக சேர்த்துக் கொள்ளும் இலை வகைகள் எவை?

5) புதிய மீனொன்றை வாங்கும் போது கவனம் செலுத்த வேண்டிய காரணிகள் எவை? (10புள்ளிகள்)

03) 1) பின்வரும் அளக்கும், வெட்டும், அடிக்கும் கருவிகளுக்கு உதாரணம் தருக

2) ஆணி வகைகள சில தருக?

3) சுழலும்வேகம், திசை என்பனவற்றை மாற்றி அமைப்பதற்கு பயன்படும் பொறிமுறை எது?

4) வில் சுருள் மூலம் இயங்க கூடிய சில பொருட்களை தருக?

5) நீரில் ஊற வைத்து சமைக்க கூடிய உணவுப்பொருட்கள் சில தருக. (10புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6,7,8

# STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page